17th July 1964]

நடத்தப்படுகிறதா? அல்லது மொத்தமாக வருமான அடிப்படையிலே இந்தப் பரிசீலனை நடத்தப்படுகிறதா? அல்லது ஜனத் தொகை அடிப்படையில் பரிசீலனை நடத்துவார்களா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: நபர்வாரி கிராம நில வரியின் அடிப்படையில்தான் இந்த க்ளாஸிஃபிகேஷன் செய்யப்படுகிறது. ஏ, பி, சி, டி என்பதற்குத் தனித் தனியாக இவ்வளவு சத விகிதம் என்று ஒதுக்கப்பட்டிருப்பதைக் கனம் அங்கத்தினர் அவர்கள் அறிவார்கள்.

சப்-ரிஜிஸ்திரார் ஆபீஸ் (சேத்தியாதோப்பு)

*508 கேள்வி.—திரு. எஸ். சிவசுப்ரமணியன்: கனம் செய்தி விளம்பரத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

சிதம்பரம் தாலுகா, சேத்தியா தோப்பில் ஒரு சப்-ரிஜிஸ்திரார் ஆபீஸ் திறக்க உத்தேசமுண்டா?

கனம் திரு. கோ. பூவராகன்: இந்த விஷயம் பரிசீலனையில் இருக்கிறது.

எண்ணெய் வள ஆராய்ச்சி.

*509 கேள்வி—திரு. ஆ. கு. சுப்பையா: கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம், நன்னிலம் தாலுகா, திட்டச்சேரியில் எண்ணெய் கண்டுபிடிக்க பரிசோதனை செய்யப்படுகிறதா?

(இ) ஆமென்றால், விவரமென்ன?

THE HON. SRI R. VENKATARAMAN: (a) & (b) The Geological Survey of India have carried out geophysical investigation along the coastal areas. The investigations have revealed that Oil sedimentary formations to a thickness of 5,000 to 6,000 ft. underlie the area between Tittacheri in Nannilam taluk, Thanjavur district and Karaikal. The sediments get thicker in 9,000 to 10,000 feet near Nagapattinam. The Geological Survey of India have recommended test drilling to be carried out near Thirumalairajanpattinam, after further work is carried out in the area.

திரு. கே. ஏ. மதியழகன்: ருஷ்ய நாட்டைச் சேர்ந்த ஜியாலஜிகல் ரிசர்ச் துறையின் தலைவர் அவர்கள் கருத்துத் தெரிவிக்கின்றபோது, "காவிரிப் படுகையிலே இருக்கும் பாறைகளினுடைய அமைப்பினால், அங்கே எண்ணெய்க் கிணறு இருப்பதற்கான சாத்தியக்கூறு இருக்காது" என்று கூறியிருக்கின்றாரே, அது சர்க்காரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டதா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: ருஷ்ய நிபுணர்கள், "அங்கே எண்ணெய் இருக்கலாம்" என்றுதான் சொல்லியிருக்கிறார்கள்.

[17th July 1964

திரு. ஆ. கு. சுப்பையா : இந்தப் பரிசோதனை முடிவதற்கு எவ்வளவு காலம் ஆகும் என்பதைக் கனம் அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அது சொல்ல முடியாது. ஆயில் எக்ஸ்பிளோரேஷன் பல நாடுகளில் செய்யப்பட்டதைப் பார்த்தால், பல வருஷங்கள்—இருபது முப்பது வருஷங்கள்கூட—இத்தகைய ஆராய்ச்சி செய்திருக்கிறார்கள். எண்ணெய் கண்டு பிடிப்பது என்பது அவ்வளவு சுலபமான காரியம் அல்ல.

திருமதி சி. குழந்தையம்மாள் : தலைவர் அவர்களே, இந்த எண்ணெய் வள ஆராய்ச்சிக்காக ட்ரில்லிங் மிஷின்களெல்லாம் விவசாய இலாகாவிலிருந்து எடுக்கப்பட்டனவா ? அல்லது இதற்காகத் தனியாக வாங்கப்பட்ட மிஷின்கள் வேலை செய்கின்றனவா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : விவசாய இலாகாவிலிருந்து எடுக்கப்பட்ட ட்ரில் எல்லாம் கேணி தோண்டுவதற்குக்கூட சில இடங்களில் உபயோகமாக இருக்காது. எண்ணெய் கண்டுபிடிப்பதற்கான ஆராய்ச்சியில் 2,000, 3,000, 6,000 அடி எடுக்கவேண்டிய ஹெவி ட்ரில் தேவைப்படுவதால், அவை விவசாய இலாகாவிலிருந்து எடுக்கப்படவில்லை.

திரு. கோ. சி. மணி: தலைவர் அவர்களே, இந்த ஆராய்ச்சிக்குத் தேவையான எல்லா இயந்திரங்களும் வந்துவிட்டனவா அல்லது இன்னும் பாக்கி இருக்கிறதா ? அப்படிப் பாக்கி இருக்குமானால், அதன் காரணமாக வேலை நிறுத்திவைக்கப்படவேண்டிய நிலை இருக்கிறதா ? இதற்காக நில ஆர்ஜிதம் எல்லாம் செய்தாகி விட்டதா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அதற்கு வேண்டிய இயந்திரங்களெல்லாம் சிறிது சிறிதாக வந்துகொண்டே இருக்கின்றன. எல்லா இயந்திரங்களையும் சேர்த்த பிறகுதான் வேலை ஆரம்பிக்க வேண்டும் என்பதில்லை. முதலில் சில இயந்திரங்கள் வேண்டும்; பிறகு 2,000 அடி ஆழம் போன பிறகு புது இயந்திரங்கள் வேண்டியிருக்கும். அவற்றின் மூலம் கீழே தோண்ட வேண்டி இருக்கிறது. மேலும் நம் நாட்டிலே அவற்றிற்கு வேண்டிய 'ஸ்பேர்ஸ்' கிடைக்காததால், சிறிது காலதாமதம் ஏற்படுகிறது.

திரு. இரா. நெடுஞ்செழியன்: அவைத் தலைவர் அவர்களே, பட்டுக்கோட்டை, திருமலராயன்பட்டணம் இவற்றின் பக்கத்தில் எண்ணெய் ஊற்றுக்களுக்காக தோண்ட வேண்டும் என்று அமைச்சரவர்கள் தெரிவித்தார்கள். இதுவரையில் நடந்த ஆராய்ச்சியின் பயனாக நம்பிக்கை ஊட்டத் தக்க வகையில் விளைவுகள் ஏற்பட்டு இருக்கின்றனவா என்று தெரிவிக்க முடியுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: இதுவரையில் செய்த ஆராய்ச்சியின் பயனாக அங்கே எண்ணெய் இருக்கிறது என்பதற்கான சாத்தியக்கூறுகள் இருக்கின்றன என்றுதான் கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது.